சுற்றாடல் சுற்றறிக்கை 02/ 2021

அனைத்து மாவட்ட செயலாளர்கள் / அரச அதிபர்கள்
மற்றும் அனைத்து பிரதேச செயலாளர்கள்

**"சுரகிமு கங்கா" தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டம்**

நாட்டின் மத்திய மலை நாட்டிலிருந்து ஆரம்பித்து எட்டுத் திக்கும் பாய்ந்தோடக் கூடிய ஆறுகள் இலங்கைக்கே உரித்தான மிகவுயர்ந்த இயற்கை வளமாக காணப்படுகின்றன. இவ் ஆறுகள் நாட்டில் பரம்பியுள்ள அடிப்படையில் நாட்டின் சூழல் தொகுதி, உயிரியல் மற்றும் மண் பல்வகைமை, விவசாயத் துறை, குடியேற்றங்கள் மற்றும் பல்வேறு தொழிற் துறைகளும் நிலைப்பேறடைந்துள்ளன. பண்டைய கால கட்டத்தில் மிகத் தூய்மையாகவிருந்த இந் நீரேந்துகள் மனிதனது முறையற்ற செயற்பாடுகள் காரணமாக அண்மைக் காலமாக பல்வேறு சவால்களுக்கு முகங் கொடுத்துள்ளன. சனத் தொகை விருத்தியும், அதனுடன் தொடர்புடைய நகரமயமாக்கம் மற்றும் கைத்தொழிலாக்கம் ஆகிய காரணிகளும் எமது நாட்டின் ஆற்றுத் தொகுதிகள் மாசடைவதற்கு மிக முக்கிய காரணிகளாக அமையப் பெற்றுள்ளன. பொலித்தீன், பிளாஸ்த்திக், மலக் கழிவுகள் உட்பட பல்வேறு நகர்ப்புற கழிவுகள் எவ்வித முறையான திட்டங்களுமின்றி நீர் வழிகளுக்கு வெளியாக்கப்படுதல், கைத்தொழில் கழிவுகள் முறையாக சுத்திகரிக்கப்படாது சுற்றுச் சூழலுக்கு வெளியாக்கப்படுதல், விவசாய செயற்பாடுகள் காரணமாக ஏற்படக் கூடிய மண்ணரிப்பு மற்றும் விவசாய இரசாயன பதார்த்தங்கள் ஆற்று நீருக்கு ஒன்று சேர்க்கப்படுதல் ஆகிய விடயங்கள் இன்றைய கால கட்டத்தின் தீவிர சுற்றாடல் சவால்களென சுட்டிக் காட்டலாம். இது தவிர, மணல் அகழ்வு மற்றும் ஏனைய கனிய பதார்த்தங்களின் அகழ்வு போன்ற மானிட செயற்பாடுகளும் கரையோர அரிப்பு மற்றும் உயிர்ப் பல்வகைமை அழிவு போன்ற விடயங்களும் ஆற்று மற்றும் நீரோட்ட வழித் தொகுதிகளின் நீண்ட கால நிலைப்பாட்டுக்கு பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய காரணிகளென கண்டறியப்பட்டுள்ளன.

2. மேற்குறித்த அடிப்படையில் ஏற்படக் கூடிய பல்வேறு நீர் மாசாக்கிகள் காரணமாக எமது நாட்டின் ஆற்றுத் தொகுதிகளுக்கு அழிவுகள் ஏற்படுவதால் அனைத்து குடிகளதும் நாளாந்த செயற்பாடுகளுக்கு பாரியளவில் பாதகமான தாக்கங்கள் ஏற்படுவதுடன், இச் செயற்பாடுகள் காரணமாக குடிநீர், குடியியல் செயற்பாடுகள், விவசாயத் துறை, நீர் மின் உற்பத்தி, சுற்றுலாத் துறை, மீன் பிடித் துறை போன்ற பல மிக முக்கிய துறைகளின் நிலைப்பாட்டுக்கு எதிர் மறைவான தாக்கங்களை ஏற்படுத்திய வண்ணமுள்ளன.

3. இந்நிலையை கருத்திற் கொண்டு, நாட்டை கட்டியெழுப்பு **சுபீட்சத்தின் நோக்கு** தேசிய கொள்கையின் பேண்தகு சுற்றாடல் கொள்கைக்கு இசைவாக இலங்கையிலுள்ள ஆற்றுத் தொகுதிகளை பாதுகாப்பதற்கென "சுரகிமு கங்கா" தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துவதற்கு சுற்றாடல் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

4. இந்நிகழ்ச்சித் திட்டத்தை தேசிய மட்டத்தில் செயற்படுத்தும் பணிகள் சுற்றாடல் அமைச்சின் செயலாளரது தலைமையில் பங்குதாரர் அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் பங்குபற்றுதலுடன் கூடிய **அமைச்சுக்களுக்கிடையிலான தேசிய முன்னெடுப்பு குழுவினால்** முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. இக் குழு இரண்டு மாதத்துக்கொருமுறை ஒன்று கூடி தேசிய ரீதியில் கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு தேவையான கொள்கை ரீதியான தலையீட்டை மேற்கொள்ளும். நிகழ்ச்சித் திட்டத்தை தேசிய ரீதியில் பேண்தகு மற்றும் நீண்ட கால நிகழ்ச்சித் திட்டமொன்றாக செயற்படுத்தும் பொறுப்பு மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

5. தேசிய நிகழ்ச்சித் திட்டத்தை மாவட்ட மற்றும் மாகாண ரீதியில் பங்குதாரர் நிறுவனங்களிடையில் சிறந்த ஒருங்கிணைப்புடன் முறையாகவும், வினைத்திறன் மிக்கதாகவும் செயற்படுத்துவதற்கென மாவட்ட மற்றும் மாகாண ரீதியில் செயலாற்றுகை குழுக்களை நிலை நாட்ட வேண்டியுள்ளது.

6. இந்நிகழ்ச்சித் திட்டத்தை மாவட்ட ரீதியில் முன்னெடுப்பதற்கென மாவட்ட செயலாளரது தலைமையில் மாவட்ட குழுக்கள் நிலை நாட்டப்படுவதுடன், அதன் உள்ளடக்கம் கீழேயுள்ளவாறு அமைய வேண்டுமென சிபாரிசு செய்யப்படுகின்றது.

   1. மாவட்ட செயலாளர் / அரச அதிபர் - குழுத் தலைவர்
   2. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மாவட்ட பணிப்பாளர்/ பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் - குழுச் செயலாளர்
   3. மாகாண சபையின் பிரதான செயலாளரை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதியொருவர்
   4. அரச துறையின் அங்கத்தவர்கள் - கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களின் மாவட்ட உத்தியோகத்தர்கள்

      i. உள்ளூராட்சி திணைக்களம்
      ii. வன பராமரிப்பு திணைக்களம்
      iii. விவசாய திணைக்களம்
      iv. கம நல அபிவிருத்தி திணைக்களம்
      v. சமுர்தி அபிவிருத்தி திணைக்களம்
      vi. நீர்ப்பாசன திணைக்களம்
      vii. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை
      viii. காணி பயன்பாட்டு திட்டமிடல் திணைக்களம்
      ix. சுகாதார திணைக்களம்
      x. கல்வி திணைக்களம்

xi. இலங்கை பொலிஸ்
xii. சிவில் பாதுகாப்பு செயலணி
xiii. அனர்த்த முகாமைத்துவ நிலையம்

5. அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள்
6. சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் பிரதிநிதிகள்
7. சுற்றாடல் அமைச்சரது அனுமதியுடன் சுற்றாடல் அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படுகின்ற பிரதிநிதியொருவர்

7. மாவட்ட குழு, பிரதேச ரீதியான குழுக்களின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்பார்வையிடுதற்கும், தேசிய குழுவுடன் கூட்டிணைந்து சிறந்த ஒருங்கிணைப்பை பராமரிப்பதற்கும் எதிர்ப்பார்க்கின்றது. மாவட்ட குழுக்கள் ஒவ்வொரு மாதத்துக்கொரு முறை ஒன்று கூடுவதற்கு பிரேரிக்கப்படுவதுடன், அக்கூட்டங்களில் கலந்தாலோசிக்கப்படுகின்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்ட குறிப்புகளின் பிரதிகளை அமைச்சுக்கு அனுப்புமாறும் அறிவிக்கப்படுகின்றது.

8. பிரதேச குழுக்களை பிரதேச செயலாளரது தலைமையில் நிலை நாட்ட வேண்டியிருப்பதுடன், குழுவின் உள்ளடக்கம் கீழேயுள்ளவாறு அமையும்.

1. பிரதேச செயலாளர் - குழுத் தலைவர்
2. பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் - குழுச் செயலாளர்
3. உள்ளூராட்சி நிறுவனம் / நிறுவனங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள்
4. அரச துறையின் அங்கத்தவர்கள் - கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களின் பிரதேச ரீதியான உத்தியோகத்தர்கள்

i. வன பராமரிப்பு திணைக்களம்
ii. விவசாய திணைக்களம்
iii. கம நல அபிவிருத்தி திணைக்களம்
iv. சமுர்தி அபிவிருத்தி திணைக்களம்
v. நீர்ப்பாசன திணைக்களம்
vi. சுகாதார திணைக்களம்
vii. கல்வி திணைக்களம்
viii. இலங்கை பொலிஸ்
ix. சிவில் பாதுகாப்பு செயலணி

5. கிராம உத்தியோகத்தர்கள்
6. அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள்
7. சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் பிரதிநிதிகள்
8. சுற்றாடல் அமைச்சரது அனுமதியுடன் சுற்றாடல் அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படுகின்ற பிரதிநிதியொருவர்

கவனிக்கவும்: மேற்குறித்த அங்கத்தவர்களுக்கு மேலதிகமாக மாவட்ட மற்றும் பிரதேச குழுக்களுக்கென இனங் காணப்படுகின்ற முக்கியத்துவமுள்ள பங்குதாரர் நிறுவனங்களை நிரந்தர அங்கத்தவர்களாக நியமித்துக் கொள்வதற்கும், தேவையான சந்தர்ப்பங்களில் பிற தேவைப்படுமென கண்டறியப்படுகின்ற பிரதேச ரீதியான நிறுவனங்களின் உத்தியோகத்தர்களை அல்லது அங்கத்தவர்களை அழைக்கும் அதிகாரமும் குழுவுக்கு உண்டு.

9. பிரதேச ரீதியான குழு தமது பிரதேச ஆளுகைப் பிரதேசத்துக்கு உரித்தான ஆற்றை, பிரதேசம் முற்று முழுதாக உள்ளடக்கப்படும் வகையில் அவதானித்து ஆற்றின் நிலைப்பாட்டுக்கும், நீரின் தரத் தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய மூலாதாரங்களை இனங் காண்பதற்கு முன்னெடுக்க வேண்டிய செயற் பணிகளை இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருப்பதுடன், அதற்கென பேண்தகு தீர்வுகளையும் கண்டறிய வேண்டியுள்ளது. இது தொடர்பில் பயன்படுத்தக் கூடிய வழிகாட்டல் குறிப்பொன்றை சுற்றாடல் அமைச்சு வெளியிடுவதற்கு ஏற்பாடுகளை செய்துள்ளது. இது தவிர, நாட்டிலுள்ள அனைத்து ஆறுகள் தொடர்பிலும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், அதற்கமைய தயாரிக்கப்பட்ட கணினிப் பயன்பாட்டின் உதவியையும் இதற்கென பயன்படுத்தலாம்.

10. பிரதேச ரீதியான குழுவை ஒவ்வொரு மாதத்துக்கொரு தடவையும் ஒன்று திரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். குழுக் கூட்டத்தின் அறிக்கைகளையும், அக்கூட்டங்களில் முன் வைக்கப்படுகின்ற பிரச்சினைகளையும் மாவட்ட குழுவின் ஊடாக தேசிய குழுவுக்கு முன் வைப்பதற்கும் நடவடிக்கை எடுப்பது பிரதேச செயலாளரது பொறுப்பாகும்.

11. பிரதேச ரீதியாகவுள்ள அரச மற்றும் அரச சார்பற்ற இயக்கங்களின் ஒருங்கிணைப்பையும், அந் நிறுவனங்களின் மூலம் பங்களிப்பையும் பெற்ற வண்ணம் முன்னெடுக்கக் கூடிய இந்நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுப்பதற்கு தேவையான பணிகளை கண்டறிதல் மற்றும் அப்பணிகளை முறையான அனுமதியுடன் கூடியதாக செயற்படுத்துதல் பிரதேச குழுக்களின் பொறுப்பென கண்டறியப்படுள்ளன.

12. தத்தமது ஆளுகைப் பிரதேசங்களுக்கு அமைய ஆறுகளுடன் தொடர்புடைய பேண்தகு சுற்றாடல் பொருளாதார மூலாதாரங்கள் தொடர்பில் முறையாக மேற்பார்வையிடுதல், ஆறுகளின் இரு புறமுமுள்ள வன ஒதுக்கீடுகளை முறையாக பராமரித்தல் மற்றும் அவற்றின் உயிர்ப் பல்வகைமை பாதுகாப்பு செயற்பணிகளுக்கு உதவுதல், பிரதேச குடி மக்களை இச் "சுரகிமு கங்கா" தேசிய நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் அறிவூட்டுதல், பொது மக்களது கருத்துக்கள் மற்றும் பிரேரிப்புகள் தொடர்பில் கருத்திலெடுத்தல் மற்றும் தேவையான சந்தர்ப்பத்தில் பொது மக்களது உதவியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மாவட்ட மற்றும் பிரதேச ரீதியான குழுக்களின் பொறுப்புகளென கருதப்படுகின்றன.

13. இம்முக்கியத்துவமுள்ள தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் விருத்தி தொடர்பில், அதி மேதகு சனாதிபதியவர்களது தலைமையிலும், கௌரவ பிரதமரவர்களதும், கௌரவ சுற்றாடல் அமைச்சரவர்களதும், பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்பு சனாதிபதி செயலணியின் தலைவர் கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்களது தலைமையிலும் தொடர்ச்சியாக மேற்பார்வையிடப்படவுள்ளது.

14. இச்சுற்றறிக்கை அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரதும், அரச பாதுகாப்பு, உள் நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் செயலாளரதும் அனுமதியுடன் வெளியிடப்பட்டது.

ஒப்பம்/
**மருத்துவர் அனில் ஜாசிங்க**
செயலாளர்

**பிரதிகள்:**

| | | |
|---|---|---|
| 01 | சனாதிபதிபதியின் செயலாளர் | த.அ.கொ. |
| 02 | பிரதம அமைச்சரின் செயலாளர் | த.அ.கொ. |
| 03 | அமைச்சரவைச் செயலாளர் | த.அ.கொ. |
| 04 | செயலாளர், அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | த.அ.கொ. / தே.நட |
| 05 | செயலாளர், அரச பாதுகாப்பு, உள் நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு | த.அ.கொ. / தே.நட |
| 06 | அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள் | த.அ.கொ. / தே.நட |
| 07 | அனைத்து இராஜாங்க அமைச்சுக்களினதும் செயலாளர்கள் | த.அ.கொ. / தே.நட |
| 08 | அனைத்து திணைக்களங்களினதும் தலைவர்கள் | த.அ.கொ. / தே.நட |
| 09 | அனைத்து நியதிச் சட்ட நிறுவனங்களினதும் தலைவர்கள் | த.அ.கொ. / தே.நட |
| 10 | தலைவர் - மத்திய சுற்றாடல் அதிகார சபை | த.அ.கொ. / தே.நட |
| 11 | பணிப்பாளர் நாயகம் - மத்திய சுற்றாடல் அதிகார சபை | த.அ.கொ. / தே.நட |